Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — STC. 77/2018
Sessions prosecution
depositions of witness for — PW1 cross continuation

| | | |
|---|---|---|
| Time | : | 3.30pm – 4.20pm |
| Name | : | திரு. Chinnasamy |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 06th day of September 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) எனது புகார் மனுவில் KCR Enterprises என்ற நிறுவனத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் மேற்படி நிறுவனத்தின் வருமானத்தை தான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது புகார் மனுவில் KCR Enterprises என்ற நிறுவனத்தை தரப்பினராக காட்டியுள்ளேனா என்றால் இல்லை. என் பெயரை மட்டும் தான் காட்டியுள்ளேன். நானும், நிறுவனமும் ஒன்று தான். நானும், KCR Enterprises என்ற நிறுவனமும் ஒன்று தான் என்று எனது சட்ட அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண

வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். நான் சொன்ன விவரங்கள் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். நான் சரியான விவரங்களை கொடுத்திருந்தால் KCR Enterprises என்ற நிறுவனத்தின் வருமானத்தை தான் எதிரிக்கு கடனாக கொடுத்ததை வழக்கில் சேர்த்திருப்பார்கள் என்றும், KCR Enterprises என்ற நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அதன் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

2) 31/12/2015 ம் தேதி ரூ.1,80,000/- ம், 14/01/2016 ம் ரூ.2,50,000/-ம் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி தேதிகளில் என் கையில் பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் Bank Statement உள்ளது அதை தாக்கல் செய்துள்ளேன். எனது புகார் மனுவில் சொல்லியுள்ள 4 தேதிகளில் என் கையில் பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் Bank Statement உள்ளது. 31/12/2015 மற்றும் 14/01/2016 ஆகிய தேதிகளில் எதிரிக்கு வங்கி கணக்கு மூலமாகவும், காசோலை மூலமாகவும் பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். 30/10/2015, 02/11/2015, 31/12/2015 மற்றும் 14/01/2016 ஆகிய தேதிகளில் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமான வசதி இல்லை என்றும், அந்த தேதிகளில் என் கையில் அவ்வளவு பணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பணம் இருந்ததால் தான் கொடுத்துள்ளேன். எனக்கு வசதி இருந்தது.

3) மேற் சொன்ன 4 தேதிகளிலும் எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் வேறு யாருக்கும் தெரியாது என்றால் எனது மனைவிக்கும், எனது நண்பர்களுக்கு தெரியும். இவ்வளவு பெரிய தொகை கொடுக்கும் போது ஆதரமாக ஆவணங்களை எழுதி வாங்க வேண்டுமென்று எனது மனைவியோ, நண்பர்களோ ஆலோசனை சொன்னார்களா என்றால் சொன்னார்கள். நான் எதிரியிடம் கேட்டேன் அவர் காலதாமதமாக கொடுத்தார். நான் எதிரிக்கு ப ணம் கொடுத்த தேதிகளில் ஆதரமாக எதிரி ஆவணங்கள் கொடுக்க மறுத்து விட்ட நிலையில் எதிரிக்கு பணம் கொடுக்காமல் இருந்திருக்கலாம் என்றும், தற்போது எதிரி காலதாமதமாக ஆவணம் கொடுத்தார் என்று சொல்வது ஏற்று கொள்ள தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. காலதாமதமாக எதிரி எப்போது ஆவணம் கொடுத்தார் என்றால் 26/11/2017 ல் கொடுத்தார். 14/01/2016 ல் இருந்து 26/11/2017 வரை நான் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கேட்டு கொண்டு இருந்தேன்.

4) எனது புகார் மனுவில் 26/11/2017 ல் 28/11/2017 தேதியிட்ட காசோலையையும், 07/12/2017 தேதியிட்ட காசோலையும் எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன்

என்றால் ஆமாம். எதிரி வழக்கு காசோலைகளை என் வீட்டில் வைத்து கொடுத்தாரா அல்லது எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தாரா என்றால் எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தார். அப்போது எதிரியின் வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் எதிரியின் மனைவி மற்றும் குழந்தைகள் இருந்தார்கள். சாட்சி மீண்டும் தனது நண்பர் ஒருவரை அழைத்து சென்றதாக கூறுகிறார். எனது நண்பரின் பெயர் என்ன என்பதையும், அவர் எதிரி காசோலைகள் கொடுக்கும் போது என்னுடன் இருந்தார் என்பதையும், எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி வழக்கு காசோலைகளை எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும் என்றால் சரிதான். எனது வழக்கில் எதிரி தனது கைப்பட காசோலைகளில் உள்ள விவரங்களை பூர்த்தி செய்து கொடுத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி வழக்கு காசோலைகளை எனக்கு பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி பூர்த்தி செய்து தான் கொடுத்தார்.

5) வழக்கு காசோலைகளில் எழுதப்பட்டுள்ள விவரங்களின் கையெழுத்தை நிரூபணம் செய்வதற்கு கையெழுத்து நிபுணருக்கு ஆவணங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கிறேனா என்றால் எடுக்கிறேன். வழக்கு காசோலைகளில் உ ள்ள விவரங்களை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றும், வழக்கு காசோலைகளில் உள்ள கையொப்பத்தை எதிரி செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு காசோலைகளை எந்த வங்கியில் எந்த தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் Central Bank Uthanapalli Branch எதிரி கொடுத்த தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன். காசோலைகள் Funds Insufficient என்று திருப்பப்பட்டு விட்டது. காசோலைகள் திருப்பப்பட்ட விவரம் எவ்வளவு நாட்களில் எனக்கு தெரிய வந்தது என்றால் 1 வாரத்தில் தெரிய வந்தது. காசோலைகள் திருப்பப்பட்ட 30 நாட்களுக்குள் நான் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

6) எனது புகார் மனுவில் எதிரியிடம் எந்த தேதியில் மீண்டும் சென்று கேட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எனக்கும், எதிரிக்கும் இடையே email மூலமாக தகவல் பரிமாற்றம் நடந்துள்ளது என்றால் 2017 க்கு பிறகு நடைபெறவில்லை. காசோலைகள் பணம் இல்லை என்று திருப்பப்பட்டது குறித்து Email மூலமாக எதிரியிடம் கேட்பதற்கு வாய்ப்பு இருந்தது என்றால் இருந்தது. Email ல் கேட்கவில்லை. காசோலைகள் திருப்பப்பட்ட பிறகு பணத்தை திருப்பி கொடு என்று எதிரியிடம் எத்தனை நபர்களை அழைத்து சென்று கேட்டேன் என்றால் 2 பேரை அழைத்து சென்று கேட்டேன். அந்த 2 நபர்களை எனது சட்ட அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலைகள் திருப்பப்பட்டது குறித்து நான் எந்த காலத்திலும் எதிரியிடம் நேரடியாகவோ, எழுத்து

பூர்வமாகவோ, ஆட்களை அழைத்து கொண்டோ நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையாகவே நான் எதிரியிடம் கேட்டியிருந்தால் எந்த தேதியில் எந்த நபர்களை அழைத்து சென்று கேட்டேன் என்று குறைந்த பட்ச தகவலையாவது வழக்கில் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல.

7) நான் எதிரியிடம் எந்த காலத்திலும் வழக்கு காசோலைகள் திருப்பப்பட்டது குறித்து கேட்கவில்லை என்றும், அதனால் 2 வதாக வழக்கு காசோலைகளை எதிரி வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னதாக சம்பவமே நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு காசோலைகளை ஒரே தேதியில், ஒரே சமயத்தில் கொடுத்ததாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.1 வழகக்கு காசோலையில் பெயரின் இன்சியலில் K என்ற எழுத்திற்கு கீழ் கோடு போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.2 வழகக்கு காசோலையில் பெயரின் இன்சியலில் K என்ற எழுத்திற்கு கீழ் கோடு போடப்படவில்லை என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.1 மற்றும் 2 வழக்கு காசோலைகளில் நிரப்பப்பட்டுள்ள விவரங்கள் வேறு வேறு கையெழுத்துகளால் உள்ளது என்றால் சரியல்ல. ஒரே மாதிரியாக தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.1 மற்றும் 2 வழக்கு காசோலைகளில் நிரப்பப்பட்டுள்ள விவரங்கள் வேறு வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது உள்ளது என்றால் சரியல்ல. ஒரே பேனாவால் தான் உள்ளது. தற்போது ஞாபகமில்லை.

8) 2 வழக்கு காசோலைகளிலும், எதிரியின் கையொப்பம் வேறு வேறு ஆக உள்ளது என்றால் இரண்டும் அவருடைய கையொப்பம் தான். எதிரி அவருடைய நிறுவனத்தில் இருந்து Order களை பெற்று பொருட்களை தயார் செய்வதற்கு எனக்கு உதவி செய்து கொண்டு இருந்தார் என்றால் இல்லை. எதிரி 2017 ஜனவரில் விபத்து ஏற்பட்டு சிகிச்சையில் இருந்த சமயம் எதிரியின் வீட்டில் இருந்து லேப்டாப் வைத்திருந்த பை மற்றும் பையில் இருந்த எதிரியின் காசோலைகளை எடுத்து வைத்து கொண்டு எதிரியின் காசோலைகளை மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வழக்கு காசோலைகளை கொடுத்த சமயம் எனக்கும், எதிரிக்கும் எந்த பண பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த காலத்திலும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், அதற்கு ஆதரமாக எதிரி வழக்கு காசோலைகளை

கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டுமென்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.